**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS.127/2023**

நாள்.03.07.2025

**பி.வா.சா.1. வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது எனது சகோதரர் மற்றும் சகோதரி என்றால் சரிதான். எனது பெற்றோர்களுக்கு வாதிகள் மற்றும் என்னை தவிர வேறு வாரிசுகள் யாரும் கிடையாது. தாவா சொத்தில் கண்ட புல எண்கள், அடையாளங்கள் குறித்து ஏதேனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. எந்த புல எண்ணில் கண்ட சொத்திற்கு 90/2B சொத்திற்கு ஏற்கனவே உள்ள பழைய நான்கெல்லைகள் போடப்பட்டுள்ளது. புதிய நான்கெல்லை போடவில்லை. எனது தந்தை எப்போது இறந்து போனார் என்றால் 14.10.2021–ல் இறந்து விட்டார். விளக்குடி, சிவன் கோவில் தெருவில் இறந்து போனார். எனது தந்தை இறந்து போன வீடுதான் தாவா வழக்கில் 1–ம் இன சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்திரம் 30 குழி உள்ளது. அந்த சொத்தில் என்ன உள்ளது என்றால் அரசு உதவியுடன் புதிய காலனி வீட்டை 2018–ல் கட்டியுள்ளேன். அதற்கு முன்பாக அந்த இடத்தில் என்ன இருந்தது என்றால் கூரை வீடு இருந்தது. அந்த கூரை வீடு எத்தனை ஆண்டுகளாக இருந்தது என்றால் 15 ஆண்டுகளாக இருந்தது. நானும், வாதிகளும் விளக்குடி கிராமத்தில் வடுகத்தெருவில் உள்ள வீட்டில் தான் பிறந்தோம். அந்த வடுகத்தெருவில் உள்ள வீட்டில் எனது பெற்றோர்கள் வாடகைக்கு குடியிருந்து வந்தார்கள். நான் தற்போது குடியிருந்து வரும் வீடானது என் தந்தை காலத்திலிருந்து என் அனுபவத்தில் இருந்து வருகிறது. நான் தற்போது குடியிருந்து வரும் இடத்தில் என் தந்தை கூரை வீடு கட்டியபோது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 8 வயது இருக்கும். 1–ம் வாதிக்கு 15 வயதும், 2–ம் வாதிக்கும் 2 வயதும் இருக்கும். அந்த கூரை வீட்டிற்கு யார் பெயரில் வீட்டு வரி இருந்தது என்றால் என் தந்தை பெயரில் இருந்தது. 2016–ல் அந்த சொத்திற்கு எனது பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளேன். 2016–ஆம் ஆண்டு வரை

அந்த சொத்திற்கு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் என் தந்தை பெயரில் இருந்தது. தாவா 1–ம் இன சொத்தானது அரசு புறம்போக்கு நிலம் கிடையாது என்றும், ஆரம்பத்திலிருந்து பட்டா இடம் என்றால் அரசு புறம்போக்கு இடம். தாவா 1–ம் இன சொத்தானது அரசு புறம்போக்கு இடம் என்பதற்கு வருவாய் துறை ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 –ல் பட்டா எண். 340 விஸ்வநாத கண்டியர் என கண்டுள்ளது என் தந்தையின் பெயர் தான். தாவா 1–ம் இன சொத்து எனக்கு மட்டும் எப்படி கிடைத்தது என்றால் எனது தகப்பனார் இறப்பதற்கு முன்பாகவே எனக்கு கொடுத்துவிட்டார். எனது தந்தை வாய்மொழியாக தாவா 1–ம் இன சொத்தை எனக்கு கொடுத்துவிட்டார். ஆவணங்கள் ஏதும் இல்லை. தாவா 1–ம் இன சொத்தை பொறுத்து வாதிகள் இருவரும் அவர்களுக்கு உரிய பாக உரிமையை விடுதலை பத்திரம் மூலமாக எனக்கு எழுதி கொடுக்கவில்லை. தாவா 2–ம் இன சொத்தானது எந்த ஊரில் உள்ளது என்றால் விளக்குடி கிராமத்தில் தான் உள்ளது. தாவா 2–ம் இன சொத்து யாருக்கு சொந்தமான சொத்து என்றால் என் தந்தைக்கு சொந்தமான சொத்து. அந்த சொத்தை என் தகப்பனார் யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் செண்பகம், ரெத்தினசாமி வகையறாவிடம் இருந்து கிரயம் வாங்கப்பட்ட சொத்து. என் தந்தை கிரயம் பெற்ற சொத்திற்குண்டான கிரய பத்திரத்தை வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளதை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1–ல் உள்ள கையெழுத்து என் தந்தை உடைய கையெழுத்து தான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாங்குபவர் என்ற இடத்தில் K.விஸ்வநாதன் என கையொப்பம் போட்டுள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2–ம் பக்கத்தில் எனது தந்தை ரேகை மற்றும் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா 2–ம் இன சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் எனது மகன் வீரமுத்து என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி சொத்து எப்போது, எப்படி என் மகனுக்கு கிடைத்தது என்றால் 09.09.2001-ல் என் தந்தை உயில் மூலம் என் மகனுக்கு எழுதி

கொடுத்துள்ளார். உயிலை யார் சொல்லி என் தந்தை எழுதினார் என்றால் அவர் தன்னிச்சையாக எழுதி கொடுத்துள்ளார். உயில் எழுதிய சமயத்தில் என் தந்தைக்கு என்ன வயது இருக்கும் என்றால் 90 வயது இருக்கும். அந்த சமயத்தில் எனது தந்தை நல்ல திடகாத்திரமாக இருந்தார். எந்த ஊரில் வைத்து உயில் எழுதப்பட்டது என்றால் திருத்துறைப்பூண்டியில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுதப்பட்டது. உயிலை யார் எழுதி கொடுத்தார் என்றால் நாகராஜ ஐயர் எழுதி கொடுத்தார். உயில் எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் 1-ம் வாதி, என் தகப்பனார், நான், எனது மகன் ஆகியோர்கள் இருந்தோம். உயில் எழுதுவதற்கு யார் விவரம் சொன்னார் என்றால் எனது தந்தை தான் சொன்னார். உயில் எழுதும் போது எதை பார்த்து என் தந்தை விவரம் சொன்னார் என்றால் என் தந்தை கிரயம் வாங்கிய பத்திரத்தை விவரம் சொன்னார். உயில் எழுதிய தேதியில் என் தகப்பனாருக்கு எத்தனை பேரப்பிள்ளை இருந்தார்கள் என்றால் 6 பேரப்பிள்ளைகள். என் தந்தைக்கு 6 பேரப்பிள்ளைகள் மீது விரோதம் இருந்ததா என்றால் இல்லை. என் மகன் தான் என் அப்பாவை நன்றாக பார்த்து வந்தார். உயிலை படித்து பார்த்து விட்டு தான் என் தந்தை கையெழுத்து போட்டாரா என்றால் நாகராஜ ஐயர் படித்து காண்பித்து அதன் பிறகு என் தந்தை கையெழுத்து போட்டார். என் தந்தை எத்தனை கையெழுத்துகள் போட்டார் என்றால் கைரேகை தான் வைத்தார். வா.சா.ஆ.1 காலத்தில் என் தந்தைக்கு வயது குறைவாக இருந்ததால் K. விஸ்வநாதன் என கையெழுத்து போட்டுள்ளார். ஆனால் பி.வா.சா.ஆ.1-ல் எனது தந்தைக்கு வயதாகிவிட்டதால் கைரேகை வைத்துள்ளார். பி.வா.சா.ஆ.1-ல் என் தந்தை ரேகை வைத்ததற்கு காரணம் ஏதேனும் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் திருத்துறைப்பூண்டியை சேர்ந்த பக்கிரிசாமி, பிரபாகரன். மேற்படி பக்கிரிசாமி, பிரபாகரன் ஆகியோர்கள் எனது உறவினர்களா என்றால் என் தந்தைக்கு பழக்கமானவர்கள். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஒரே நாளில் எழுதப்பட்டதா என்றால் 1-ம் வாதியின் ஆலோசனையின் படி தான் எழுதப்பட்டது. பி.வா.சா.ஆ.1

ஆவணத்தில் ஏன் 1-ம் வாதியிடம் சாட்சி கையெழுத்து வாங்கவில்லை என்றால் நான் அவரிடம் பேசமாட்டேன். அதனால் வாங்கவில்லை. பி.வா.சா.ஆ.1- ஆவணம் எத்தனை மணிக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் மாலை 04.00 மணிக்கு. நான் வாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் என் தந்தையிடமிருந்து என் மகன் பேரில் உயில் ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 1-ம் இன சொத்து என் தந்தைக்கு பூர்வீகமான சொத்து என்றும், 2-ம் இன சொத்தை பொறுத்து என் தகப்பனார் என் மகனுக்கு எந்த உயில் ஆவணத்தையும் எழுதி வைக்கவில்லை என்றும், தாவா சொத்தில் வாதிகளுக்கு தலா 1/3 பாகம் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:– இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.